[1st November 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கமிட்டியின் சிபார்சுகள் மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கமிட்டியி லுள்ளவர்கள் பின்வருமாறு :—

Chairman

Sri S. R. Kaiwar, I.C.S.,

Members

Chief Engineer, P.W.D. (General)

Chief Engineer (Irrigation)

Deputy Secretry to Government, Finance Department

Executive Engineer, P.W.D., Building Centre Division is the Secretary of the committee.

திரு. வை. சங்கரன் : இதிலே 'நான்-அபிஷியல்' ஒருவரும் மெம்பராக இல்லையா? எந்தக் காலத்திற்குள் ரிப்போர்ட் டைக் கொடுக்கவேண்டுமென்று இந்தக் கமிட்டியார் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கமிட்டியின் ரிப்போர்ட் கொடுத்துவிட்டார்கள். கமிட்டியின் சிபார்சுகள் பரிசீலனை செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதிலே நான்-அபிஷியல் ஒருவரையும் போடவில்லை. போடவேண்டிய அவசியம் இருப்பதாக அரசாங்கத்துக்கு தோன்றவில்லை.

ஸ்தல ஸ்தாபன தேர்தல்கள்

* *1070-டிடி* **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்தல ஸ்தாபன தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படும் என்பது உண்மையா?

(இ) அப்படியானால் எப்போது தேர்தல் நடத்தப்படும்?

*1070-UU. Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to State—

(*a*) the reason for postponing the elections to the Municipalities and the Corporation of Madras; and

(*b*) when the decision was taken?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது சம்பந்தமாக நான் கூறிக் கொள்ள விரும்புவது, கனம் அங்கத்தினர்கள் அறிந்துள்ளபடி, ராஷ்டிரபதி அவர்கள் பிறப்பித்துள்ள அவசரப் பிரகடனத்தை முன்னிட்டு, மாநகராட்சி, நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள், பஞ்சாயத்துக்கள்—இவைகளுக்கு நடக்க விருக்கும் தேர்தல்களை நாட்டின் அவசர நிலைமை முடிந்து அதன் பின் ஆறு மாதம் வரை தேர்தல்களை ஒத்திவைப்பது என சர்க்கார் தீர்மானித்துள்ளது. அதன்படி இச்சபையில் சர்க்கார் கட்சித் தலைவர் மசோதா ஒன்றை நேற்று பிரேரேபித்துள்ளதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். இதற்குமேல் கனம் அங்கத்தினர் கள் ஒன்றும் கேள்வி கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.